කාන්තාව සහ මාධ්‍ය සාමූහිකය
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
Women and Media Collective
Established 1984

**<u>தேர்தல் சீர்திருத்தத்துக்கான முன்மொழிவுகள்</u>** - 2021 ஜூலை 15

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமைகளுக்கான தோதான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும், அவசியமான திருத்தங்களை பரிந்துரைப்பதற்கும் என நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு (PSC)

**பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு; பெண்கள் வள நிலையம், குருணாகல மாவட்டம்; பெண்கள் அபிவிருத்தி நிலையம், பதுளை மாவட்டம்; பெண்கள் ஒத்துழைப்பு முன்னணி, கண்டி மாவட்டம்; கிராமியப் பெண்களின் முன்னணி, காலி மாவட்டம் மற்றும் மனிதவள அபிவிருத்திக்கான விழுது நிலையம், வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்கள் ஆகிய நிறுவனங்களிடமிருந்து.**

---

இந்த முன்மொழிவுகள், நாடு பூராவுமுள்ள பெண் அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரித்துவாதிடுவோர்களுடன் 2021.06.12 மற்றும் 2021.06.16 ஆம் திகதிகளில் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான ஆலோசனைக் கலந்துரையாடல்களை அடிப்படையாகக்கொண்டு சமர்ப்பிக்கப்படுகின்றன. அத்துடன் இந்த முன்மொழிவுகளினுள், 2004 மே மாதத்தில் தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றிய பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கும் மற்றும் 2016 இல் அரசியலமைப்பு சீர்திருத்தம் பற்றிய பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவுக்கும் எம்மால் செய்யப்பட்ட சமர்ப்பணங்களில் உள்ள பரிந்துரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த ஆரம்ப வரைவுக் கட்டத்தில் பொதுமக்களின் சமர்ப்பணங்களுக்கு அழைப்பு விடுத்தமைக்காக பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை, இன்னுமொரு சுற்று ஆலோசனைக் கலந்துரையாடலுக்காக அவர்களின் முடிவுகளையும், இறுதிப்படுத்தலுக்கு முன்னரான பரிந்துரைகளையும் பொதுமக்களுடன் பகிர்ந்துகொள்ளுமாறு நாம் அக்குழுவினரை மரியாதையுடன் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம். நாம், எமது பரிந்துரைகள் குறித்து மேலும் விபரமாகக் கலந்துரையாடுவதற்கென பாராளுமன்றத் தெரிவுக் குழுவைச் சந்திப்பதற்கும் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளோம்.

இப்பரிந்துரைகள் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளன; அவற்றுள் முதலாவது பகுதி, பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் உள்ளடங்கலாக, தேர்தல் முறைமைகளின் சீர்திருத்தத்துடன் தொடர்புடையதாகும். இரண்டாவது பகுதி, பொதுவான தேர்தல் சீர்திருத்தம் பற்றியதும் இலங்கையில் அரசியல் கலாசாரத்தை

56/1 සරසවි මාවත, කාසල් වීදිය, කොළඹ 8, ශ්‍රී ලංකාව
சரசவி லேன், காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை.
Sarasavi Lane, Castle Street, Colombo 8, Sri Lanka

Telephone: +94-11-2690192, 5632045, 5635900, 5635800, 2690201, Fax: +94-11-2690192, 2690201, Email: wmcsrilanka@gmail.com
www.womenandmedia.org facebook.com/womenandmediacollective twitter.com/womenandmedia

Registration No. GA 2476

ஜனநாயகமயப்படுத்துவதற்கான பரிந்துரைகளைக் கொண்டதுமாகும். ஆரம்பத்தில், தேர்தல் சீர்திருத்தம் பற்றிய முக்கிய பணியை நான்கு முக்கிய கோட்பாடுகளுக்கமைய கவனத்திற்கொள்ளுமாறு நாம் குழுவினரைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம். அக்கோட்பாடுகளாவன: ஒட்டுமொத்த விகிதாசாரத்தை உறுதிப்படுத்தல், பால்நிலைசார் சமநிலை, பொறுப்புக்கூறல் மற்றும் ஒழுக்கநெறி சார்ந்ததும் ஜனநாயக ரீதியிலானதுமான அரசியல் கலாசாரத்தைச் செயற்படுத்தல்.

### A. பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமை

குடியரசொன்றின் பிரஜைகள் என்ற வகையில், இலங்கை மக்கள் இறைமை உள்ளவர்களாகவும் எல்லா அரசியல் அதிகாரங்களையும் கட்டுப்படுத்துவோராகவும் உள்ளனர். ஆகவே, மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கின்ற தேர்தல் முறைமையொன்றே நாட்டுக்குத் தேவை. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையில் (PR) வெற்றிபெற்ற ஆசனங்களின் எண்ணிக்கைக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் விகிதாசாரத்துக்கும் இடையே நேரடி இணைப்பொன்றை உருவாக்க முடியுமாக இருப்பதானது மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கின்றது. விகிதாசாரக் கோட்பாடானது தேர்தல் முறைமையொன்றுக்கு இன்றியமையாததாகும். ஏனெனில், அது பிரதிநிதித்துவப் பன்மைத்துவத்தை (plurality of representation) இயலச் செய்விப்பதுடன் யாரும் பின்னிலைப்படுத்தப்படாமல் இருப்பதையும் உறுதிப்படுத்துகின்றது. அத்தகைய பிரதிநிதித்துவப் பன்மைத்துவம் இல்லாமல் உருவாக்கப்பட்ட ஓர் அரசாங்கமானது கொள்கை மற்றும் மக்கள் விருப்பு என்பவற்றுக்கிடையே பொருந்தாத் தன்மையொன்றை ஏற்படுத்தும்.

தொகுதிவாரித் தேர்தல் முறைமையில் (FPP) வாக்காளர் தனக்கு விருப்பமான வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியும். தேர்தல் தொகுதியொன்றில் அதிகூடிய எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெறும் வேட்பாளர் அவரது ஆசனத்தை வெற்றிகொள்வார். வேட்பாளர்கள், தமக்கு வாக்களித்த மக்களுக்குப் பொறுப்புடையவர்களாக இருக்கின்ற படியினால், இந்த முறைமையானது வேட்பாளர்களுக்கும் அவர்களது தேர்தல் தொகுதிகளுக்கும் இடையே பொறுப்புக்கூறல் என்ற விடயத்தை உறுதிப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், இந்த முறைமையானது சமத்துவமான பிரதிநிதித்துவத்துடன் கூடிய உறுதியான ஓர் அரசாங்கத்துக்கு வழிவகுக்காது. இலங்கையில் ஏற்பட்ட அனுபவத்தைப் போன்று, இந்த முறைமையில், 30% வாக்குகளைக் கொண்ட ஒரு கட்சி பாராளுமன்றத்தில் 50% ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் (1970ஆம் மற்றும் 1977ஆம் ஆண்டுகளின் இலங்கையின் தேர்தல் பெறுபேறுகள்). இலங்கை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையொன்றை நோக்கி நகர்ந்ததற்கான காரணங்களுள் ஒன்றாக இதுவும் அமைந்தது. இந்த விகிதாசாரக் கோட்பாடானது தற்போதைய தேர்தல் சீர்திருத்தச் செயன்முறையில்

பாதுகாக்கப்பட வேண்டும். அத்துடன் எல்லை நிர்ணயங்களையும் அதற்கிணங்க மீள வரைய வேண்டும்.

<u>**இலங்கையின் பல்வகைத்தன்மையைப் பிரதிபலித்தல்**</u>

இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயகமானது இன மற்றும் சமயச் சிறுபான்மையினர்களும் சமூகங்களும் பற்றிய அதனது பல்வகைத்தன்மையைப் பிரதிபலிக்க வேண்டும். இக்குழுவினர்கள் பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளில் தங்களுடைய பிரதிநிதித்துவத்தை நம்புவதற்கு இயலுமானவர்களாக இருக்க வேண்டும். ஆள்புல ரீதியில் இனச் சிறுபான்மையினராக உள்ளோர் தொகுதிவாரித் தேர்தல் முறைமையை விரும்பலாம். ஆயினும், ஆள்புல ரீதியில் சிதறி வாழும் சிறுபான்மையினர்களுக்கு, பட்டியலொன்றையும் வாக்குகளின் விகிதாசாரத்தையும் அடிப்படையாகக் கொண்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை தேவைப்படலாம். விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை அதிகளவில் விகிதாசாரத்தன்மையைக் கொண்டிருப்பதனால், அது சிறிய கட்சிகளும் சமமான முறையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வழிவகுப்பதுடன் அரசியல் அபிப்பிராயத்தின் பல்வகைத்தன்மையையும் இயலுமாக்குகின்றது.

**பன்மைத்துவப் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கின்ற விகிதாசாரக் கோட்பாட்டைப் பேணும் அக்கறையில் பின்வருவன முன்மொழியப்படுகின்றன:**

I. தனிப்பட்ட வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கு வாக்காளர்களை அனுமதிக்கின்ற அதேவேளை, விகிதாசார ஒட்டுமொத்தப் பெறுபேறொன்றை உள்ளடக்குகின்றதும், கலப்புத் தேர்தல் முறைமையொன்றாக உள்ளதுமான கலப்பு உறுப்பினர் விகிதாசார (Mixed Member Proportional) முறைமையானது, எமது தேவைகளுக்கான சிறந்த தெரிவாக இருக்குமென நாம் நம்புகின்றோம்[1]. தொகுதிவாரியான ஆசனங்களையும் பட்டியல் ஆசனங்களையும் 50:50 என்ற விகிதத்தில் பிரிப்பதனூடாக இதன் உகந்த பிரதிபலிப்பு காணப்படலாம். 60:40 என்ற விகிதத்திலான பிரிப்பு கவனத்திற் கொள்ளப்படக்கூடியதாக இருந்தாலும், 70:30 என்ற விகிதத்திலான பிரிப்பு விகிதாசாரத்தின் நோக்கத்தைத் தோல்வியடையச் செய்கின்றது.

II. சிறுபான்மைக் கட்சிகளினதும் சிறிய தேர்தல் தொகுதிகளைக் கொண்ட கட்சிகளினதும் நியாயமான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த, தேர்தல் வெட்டுப்புள்ளியானது ஒரு மாவட்டத்துக்கு 2.5% ஆகப் பேணப்பட வேண்டும்.

III. விகிதாசார மற்றும்/அல்லது தேசியப் பட்டியல் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதில் எவையேனும்

[1] WMC recommendations to the Committee for drafting a new Constitution https://womenandmedia.org/submission-of-proposals-for-constitutional-reform-december-2020/

சேர்க்கைகள் அல்லது மாற்றங்கள் மேற்கொள்வதற்கான சாத்தியம் இருக்கக் கூடாது.[2]

IV. போனஸ் ஆசனங்களும் விருப்புவாக்கு முறைமையும் எதிரிடையான உட்கட்சிப் போட்டிக்கு வழிவகுத்துள்ளமையால் அவற்றை நீக்க வேண்டும்.

V. கலப்பு உறுப்பினர் விகிதாசார முறைமையில் (MMP), வாக்காளர்களுக்கு இரண்டு வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு, தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறையிலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலும் தனித்தனியாக வாக்களிப்பதற்கான அனுமதி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதன்மூலம் வாக்காளர்கள் தனிப்பட்ட வேட்பாளர் ஒருவருக்கும் அரசியல் கட்சியொன்றுக்கும் தனித்தனியாக வாக்களிக்கும் வகையில் கூடுதலான விருப்பத்தெரிவைப் பெற்றுக்கொள்வர்.

<u>**சுயேட்சை வேட்பாளர்கள் மற்றும் தேசியப் பட்டியல்**</u>

VI. ஒற்றை அங்கத்துவத் தேர்தல் தொகுதிகளுக்காக, சுயேட்சைக் குழுக்களை உருவாக்காமல் சுயேட்சை வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கான வசதிகள் தனிப்பட்ட பிரஜைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

VII. தேசியப் பட்டியல் முறைமையின் உட்கருதப்பட்ட நோக்கமான, தொழில் ரீதியிலான அரசியல்வாதிகளல்லாத துறைசார் விசேட நிபுணர்களை சட்டவாக்கமன்றத்துக்குக் கொண்டுவருதல் எனும் நோக்கம் பாதுகாக்கப்படுதல் முக்கியமாகும்.

VIII. தேசியப் பட்டியலானது மாற்றுமுறையிலும் முன்னுரிமை அடிப்படையிலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பெண்களையும் ஆண்களையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், அந்த வரிசையானது வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும்போதே நிர்ணயிக்கப்படுதலும் வேண்டும். தேசியப் பட்டியலிலிருந்தான / விகிதாசாரப் பட்டியலிலிருந்தான நியமனங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அதே வரிசையிலேயே செய்யப்பட வேண்டும் என்பதுடன் அப்பட்டியலுக்கு வெளியிலிருந்தான எத்தகைய நியமனங்களும் கவனத்திற் கொள்ளப்படக் கூடாது.

### B. பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் பால்நிலைசார் சமநிலை

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் என்பது வரலாற்று ரீதியில் மிகக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. பிரதிநிதித்துவ அரசியலின் வாயிற் காவலர்களாக அரசியற் கட்சிகளே இருந்து வந்துள்ளன என்பதுடன் பெண்கள் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களில் தங்கியிருக்க வேண்டியும் இருந்தது. பிரதான நீரோட்டத்திலுள்ள அரசியற் கட்சிகள் பெண்களுக்கு 6% இற்கு மேலான நியமனங்களை

[2] ibid

மிக அரிதாகவே வழங்கியுள்ளன. இதன் காரணமாக, இந்த வரலாற்று ஏற்றத்தாழ்வை மாற்றியமைக்க நேர்மறையான நடவடிக்கைகளில் இறங்க வேண்டிய கட்டாய நிலைக்குப் பெண்கள் தள்ளப்பட்டனர்.[3] இது தொடர்பில் எடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கையை நாம் மெச்சுகின்றோம். அதன்மூலம் உள்ளூராட்சி அதிகாரசபைகளிலுள்ள வட்டாரங்களுக்காகப் போட்டியிட பெண்களுக்கு வேட்புமனுக்களில் குறைந்தபட்சமாக 10% ஒதுக்கப்பட்டதுடன், மேலதிக ஆட்களின் பட்டியலில் (additional persons list) பெண்கள் 50% ஐ தம்வசப்படுத்திக் கொண்டனர். இக்கட்டாய ஏற்பாடுகள், எல்லா உள்ளூராட்சி அதிகாரசபைகளிலும் பெண்கள் 25% இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவைப்பாட்டை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்படுத்தியது. 341 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் 15 உள்ளூராட்சி அதிகாரசபைகளைத் தவிர ஏனைய அனைத்திலும் இந்த இலக்கு அடையப்பட்டது. பெண்கள் நேரடியாக ஆசனங்களை வெல்ல முடியாது என்ற நம்பிக்கையைத் தகர்த்து, மொத்த வட்டாரங்களுள் 10% வட்டாரங்களை ஒட்டுமொத்தமாகப் பெண்கள் வென்றெடுத்தனர். ஆகவே, இத்தகைய நேர்மறையானதும் உறுதியானதுமான ஏற்பாடுகளை வலுப்படுத்துமாறு பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நாம் கேட்டுக்கொள்கின்றோம். இதன்மூலம் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25% இற்கு அப்பால் அதிகரிக்கப்பட முடியும் என்பதுடன், பாராளுமன்றம் மற்றும் மாகாண சபை மட்டங்களிலும் இதனையொத்த உறுதியான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட முடியும். இது இலங்கை அரசியலை ஜனநாயகமயப்படுத்துவதில் முக்கியமான ஒரு படிமுறை என்றும், பிரதிநிதித்துவத்தின் சரிசமநிலையை அதிகரித்தல் என்ற விடயத்தை அடைந்துகொள்வதற்கான முக்கியமான ஒரு படிமுறை என்றும் நாம் திடமாக நம்புகின்றோம்.

ஆதலால் நாம் பின்வருவனவற்றை முன்மொழிகின்றோம்:

I. கலப்பு உறுப்பினர் விகிதாசார (MMP) முறைமையில், தொகுதிவாரி ஆசனங்களுக்காகப் போட்டியிடுவதற்கெனப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மொத்த வேட்பாளர்களின் அரைவாசித் தொகையினராகப் பெண்கள் கணக்கிடப்பட வேண்டும். உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்குப் போட்டியிடுவதற்கான சட்டரீதியில் கட்டாயப்படுத்தப்பட்ட ஒதுக்கீடாக வட்டாரங்களுக்கு மேற்கொள்ளப்படும் வேட்புமனுத் தாக்கல்களில் குறைந்தபட்சம் 10% பெண்களுக்கு வழங்கப்பட் வேண்டும், இவ்வகை ஆசனங்கள் மொத்த ஆசனங்களில் 60% ஆகக் காணப்படுகின்றன. இந்த

[3] Kodikara, C., The struggle for Equal Political representation of women in Sri Lanka, A Stocktaking Report for the Ministry of Child Development and Women's Empowerment and the UNDP, 2010
https://scholar.google.com/citations?view_op=view_citation&hl=en&user=gSjh2AkAAAAJ&citation_for_view=gSjh2AkAAAAJ:Se3iqnhoufwC

குறைந்தபட்ச சதவீதம் ஆரம்பத்தில் 20% ஆக அதிகரிக்கப்பட்டு பின்னர் அது 50% என்ற சமநிலையை அடைய வேண்டும் என நாம் கேட்கின்றோம்.

II. தெரிவுசெய்யப்படும் எந்தவொரு சபையிலும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு ஒப்புரவான வாய்ப்புக்கள் காணப்படும் நிலைக்கான தேர்தல் செயன்முறையைத் தேர்தல் சட்டங்கள் வழங்க வேண்டும். எனவே விகிதாசாரப் பிரதிநிதித்துவ மற்றும் தேசிய பட்டியல்களில் மொத்த வேட்பாளர்களில் ஆண் மற்றும் பெண் ஆகிய ஒவ்வொரு பாலாருக்கும் நாற்பது சதவீதத்துக்கு (40%) குறைவில்லாதவாறும் அறுபது சதவீதத்தை (60%) விஞ்சாதவாறும் இடம் வழங்கப்பட வேண்டுமென நாம் கேட்கின்றோம்.

III. விகிதாசாரப் பிரதிநிதித்துவ மற்றும் தேசியப் பட்டியல் என்பன முன்னுரிமை ஒழுங்கில் ஆண் மற்றும் பெண் வேட்பாளர்களின் பெயர்கள் அடுத்தடுத்து வரும்வகையில் ஒழுங்கமைக்கப்பட்டு மூடப்பட வேண்டும். இத்தேவைப்பாடு அரசியல் கட்சிகள் பெண்கள் மற்றும் ஆண்கள் நியமனங்களை பெறுவதில் ஆண்களுடன் பெண்களுக்கு சமவாய்ப்பை வழங்குவது உள்ளடங்கலாக, பட்டியல்களை உருவாக்குவதில் வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்வதை அனுமதிக்கும். மேலும் இது வாக்காளர்களுக்கு தரவரிசைப்படுத்தப்பட்ட பட்டியல் ஒன்றை வழங்குவதுடன் நியமனங்களைத் திறந்த நிலையில் உள்ளவையாக, வெளிப்படைத்தன்மை கொண்டனவாகவும் ஜனநாயக ரீதியில் அமைந்த செயன்முறை ஒன்றையும் உருவாக்கும்.

IV. மூடப்பட்ட, தரவரிசைப்படுத்தப்பட்ட பட்டியல் வேட்புமனுத் தாக்கல் செய்யும் நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன், நியமனங்கள் வெளிப்படுத்தப்பட்ட ஒழுங்கில் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் ஏற்படும் வெற்றிடங்களும் அவ்வொழுங்கிலேயே நிரப்பப்பட வேண்டும்.

V. 104 (ஆ) எனும் உறுப்புரையில் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளில் குறிப்பிடப்பட்டவாறு எந்தவொரு பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சியினதும் வேட்பாளர் பட்டியலில் ஆகக்குறைந்த இட ஒதுக்கீடு காணப்படுவதை உறுதி செய்வது தேர்தல்கள் ஆணைக்குழுவின் கடமையாக உள்ளடக்கப்பட வேண்டும்.

<u>கட்சிக் கட்டமைப்பும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பும்</u>

அரசியற் கட்சிகளுக்கான பிரசாரத்திலும் ஆதரவு திரட்டலிலும் பெண்கள் முக்கிய வகிபாகத்தை வகித்தாலும், அவர்கள் கட்சிகளினுள் காணப்படும் தீர்மானம் மேற்கொள்ளும் கட்மைப்புக்களில் இருந்து ஓரங்கட்டப்படுகின்றனர் என்பதுடன் பெரும்பாலும் தேர்தல்களின் போது சாத்தியமான வேட்பாளர்களாக வருவதிலிருந்தும் அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். உட்கட்சி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி முன்னேறுவதற்காக அரசியற் கட்சிகள், தலைமைத்துவம் மற்றும் தீர்மானமெடுக்கும்

பதவிகளுக்கு கட்சி உறுப்பினர்களை நியமித்து ஊக்குவிக்கும் சமத்துவமான முறைமையொன்றைக் கொண்டிருக்க வேண்டும். ஆகவே:

VI. தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்வதற்கு, அரசியற் கட்சிகளினுள் காணப்படும் தலைமைத்துவம் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் சார்ந்த எல்லா அமைப்புக்களுக்கும் ஆகக்குறைந்தது 30% பெண்கள் நியமிக்கப்பட வேண்டுமென சட்டரீதியாகக் கட்டாயப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அது அரசியற் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான கட்டாயத் தேவைப்பாடாகவும் அமைய வேண்டும்.

VII. தேர்தல்களில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்காக அரசியற் கட்சிகள் தெளிவான, வெளிப்படைத்தன்மையான மற்றும் பால்நிலைசார் கூருணர்வுள்ள விதிகளை வகுத்தமைக்க வேண்டும்.

VIII. அரசியற் கட்சிகள் பெண்களின் அரசியல் பிரவேசத்துக்காக அவர்களை ஊக்குவித்தல், பயிற்றுவித்தல் மற்றும் அவர்களுக்கான ஆதரவை வழங்குதல் வேண்டும் என்பதுடன், செயல்முனைப்பான அரசியல் பங்குபற்றுகையைக் கொண்டுள்ள திறமை வாய்ந்த பெண் வேட்பாளர்கள் பற்றிய பட்டியலொன்றையும் பேணி வருதல் வேண்டும்.

**C. நடத்தைக் கோவை**

I. தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்காக சட்ட ரீதியில் கட்டுப்படுத்தக்கூடிய நடத்தைக் கோவை ஒன்றை உருவாக்குதல் வேண்டும்.

II. அந்த நடத்தைக் கோவையை மீறுபவர்கள் நீதிமன்றங்களினால் குற்றப்பொறுப்புக்கு உள்ளாக்கப்பட்டு பதவியிலிருந்து மீள அழைக்கப்படுதலும் வேண்டும்.

III. நடத்தைக் கோவையை மீறுகின்ற, அரசாங்கத்தின் சகல மட்டங்களிலும் உள்ள தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்காக, அவர்கள் பதவியிலிருந்து மீள அழைக்கப்படும் முறைமையொன்று நிறுவப்படுதல் வேண்டும்.[4]

IV. அரசியற் கட்சிகளின் முகவர்களாகத் தொழிற்படும் தனிநபர்களின் ஊழல் மற்றும் சட்ட விரோத நடைமுறைகளுக்காக குறித்த அரசியற் கட்சிகள் மீது தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும். இத்தகைய தண்டனைகளை உள்வாங்கிக்கொள்ளும் வகையில் தேர்தல்தல்கள் தொடர்பாகவுள்ள உரிய சட்டங்கள் திருத்தப்படுதல் வேண்டும்.

V. பின்வருவனவற்றை சத்தியப்பிரமாணத்தின் மீது வெளிப்படுத்துவதற்கென ஒவ்வொரு வேட்பாளரும் வேட்புமனுப் பத்திரத்துக்கான சத்தியக்

[4] The Recall of MPs Act 2015 of England and Wales could be taken as a guideline in this regard.

கடதாசியொன்றை இணைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல் சட்டங்கள் திருத்தப்படுதல் வேண்டும்[5]:

a. வேட்பாளரின் கல்வித் தகைமைகள் மற்றும் அத்தகைய தகைமைகள் எத்தேதிகளில் பெற்றுக்கொள்ளப்பட்டனவோ அத்தேதிகள்.

b. வேட்பாளர், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளாரா என்பது பற்றியும், அவ்வாறிருப்பின் அத்தகைய தவறின் தன்மை பற்றியும் குற்றப்பொறுப்பின் விளைவு பற்றியும்.

VI. அவ்வாறான குற்றவியல் பதிவுகளை/ குற்றத்தீர்ப்புக்களைக் கொண்டுள்ளவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதிலிருந்து தடைசெய்யப்படுதல் வேண்டும்.

VII. அரசியற் கட்சிகள், பிரதிநிதித்துவப் பதவியிலுள்ளவர்கள் உட்பட, எல்லா உறுப்பினர்களுக்குமான பால்நிலைசார் கூருணர்வு பற்றிய நடத்தைக் கோவைகளை உருவாக்குதல் வேண்டும் என்பதுடன், அவற்றின் மீதான மீறுகைகள் உடனடியாகக் கையாளப்படுதலும் வேண்டும்.

**தேர்தல் முறைமைகளுக்கும் நடைமுறைகளுக்குமென முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களைப் பொருட்படுத்தாது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பரிந்துரைகள்**

ஜனநாயகக் கொள்கைகள் மற்றும் வாக்குரிமையைப் பயன்படுத்தல் என்பவற்றை முழுமையாக அடைந்து கொள்வதற்கு பின்வரும் விடயங்கள் அடிப்படையானவை என அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த பரிந்துரைகள் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நன்மை பயப்பன எனவும் அரசியல் நிகிழ்ச்சி நிரல் வேறுபாடின்றி இவற்றை அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்ளும் எனவும் நாம் நம்புகின்றோம்.

**D. பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளை முறைசார் வகையில் ஒழுங்குபடுத்தல்**

- அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்குக் காணப்படும் ஒரேயொரு வழிகாட்டியாக 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் மாத்திரமே காணப்படுகின்றது. இது அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளைப் பெற்று சமகாலத் தேவைகளுக்கும் சூழமைவுசார் மாற்றங்களுக்கும் ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்.

[5] PRC report.

- அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதில் அமுல்படுத்தக்கூடிய வழிகாட்டல்களைக் கட்டாயமாக்குவது கட்சி நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் உதவியாக அமையும்.
- தலைமைத்துவ மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் பதவி நிலைகளுக்கு பெண்கள் நியமிக்கப்பட வேண்டும். கட்டாயமான இட ஒதுக்கீடொன்று இது தொடர்பில் ஏற்படுத்தப்பட வேண்டும். (மேலுள்ள கருத்து B VI இனை நோக்கவும்)

**E. முன்கூட்டிய வாக்களிப்பு**

தேர்தல் தினத்தன்று பாரம்பரியமாக ஓரங்கட்டப்படும் வாக்காளர்கள் வாக்குரிமையை முழுமையாக அனுபவிக்கும் வகையில் முன்கூட்டியே வாக்களிக்கும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

- பொருத்தமான முற்பாதுகாப்புக்கள் கொண்ட இலத்திரனியல் வாக்களிப்பு முறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான பொறிமுறை ஒன்று கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.
- தொழிற்சாலைப் பணியாளர்கள், சுதந்திர வர்த்தக வலயப் பணியாளர்கள், வழக்கு விசாரணைகள் நடாத்தப்படாத நிலைகளில் தடுப்புக்காவலில் உள்ளோர், வாக்களிக்கத் தகுதியான சிறைக் கைதிகள், மாற்றுத்திறன் கொண்ட மக்கள், வைத்தியசாலைகள், தனிமைப்படுத்தல் நிலையங்கள் மற்றும் நீண்டகால பராமரிப்பு நிலையங்களில் உள்ளோர் மற்றும் மூத்த குடிமக்கள் போன்றோர் வாக்களிப்பதை இலகுபடுத்தும் வகையில் விசேட வாக்குச் சாவடிகள் அல்லது மாற்றீடான வாக்களிப்பு ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.
- அரசாங்கத்தில் பதிவு செய்த புலம்பெயர் தொழிலாளர்கள் அல்லது தற்காலிகமாக வெளிநாடுகளில் வாழ்வோர் போன்ற தரப்பினர்கள் தேர்தல் தினத்தன்று வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டியதுடன் அவர்களுக்குப் பொருத்தமான பொறிமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்படவும் வேண்டும்.[6]

**F. பிரசாரத்துக்கான நிதி**

- வேட்பாளர்களினாலும் அரசியல் கட்சிகளினாலும், அவர்கள்/அவை சார்பிலும், தேர்தலுடன் தொடர்புடைய செலவினங்கள் பற்றிய சட்டரீதியில் கட்டாயமாக்கப்பட்ட உச்ச அளவொன்று ஏற்படுத்தப்பட வேண்டியதுடன் தேர்தல் பிரச்சாரங்களுக்கென நன்கொடை மற்றும் உதவுதொகை

[6] PRC report and WMC recommendations to the Committee for drafting a new Constitution.

வழங்கியவர்களைப் பெயரிடுவது அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

- மத்திய வங்கியூடாக வெளிநாட்டு மூலங்கள் உள்ளடங்கலாக, நிதிக்கான மூலங்களைக் கண்டறியும் செயற்பாடுகள் மற்றும் ஏனைய நிதியியல் ஒழுங்குபடுத்தல்களுடன் இணைந்ததாக இதனைக் கண்காணிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழு வலுப்படுத்தப்பட வேண்டும்.
- எதிர்கால வேட்பாளர்கள் ஒரு தேர்தலுக்கு முன்னர் பகிரங்கமாக அணுகக்கூடிய சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தலைச் செய்ய வேண்டும். அவர்கள் தெரிவு செய்யப்பட்டால் அதன் பின்னரான ஒவ்வோராண்டும், அவர்களின் பதவிக்காலம் முடியும் வரை, இவ்வெளிப்படுத்தல்களை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.[7]
- தேர்தல் பிரசாரங்களுக்காக அரச சொத்துக்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் புதிய ஒழுங்குபடுத்தல்சார் வழிகாட்டுநெறிகள் உருவாக்கப்பட வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரசபையாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அரச சொத்துக்கள் மற்றும் ஊடகங்கள் என்பன அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களால் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு எதிராக முன்யோசனையுடன் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- உள்ளூராட்சி அதிகாரசபைகளிலுள்ள வட்டார உறுப்பினர்கள் மற்றும் பட்டியல் உறுப்பினர்கள் ஆகிய இருவகை உறுப்பினர்களுக்கும், அவர்களுடைய உள்ளூராட்சி இடப்பரப்பில் செலவளிப்பதற்கென சம அளவிலான நிதிசார் வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.
- பிரசார செலவினங்கள் பற்றிய விதிகளின் மீறுகைக்காக, (வென்றெடுத்த ஆசனத்தை இழக்கச் செய்யும் நிலைக்கு வழிவகுக்கும்) தண்டனையைப் பயனுறச் செய்வதற்காகத் தேவைப்படும் வெளிப்படுத்தலைச் செய்வதற்கு வேட்பாளர்கள் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

## G. தேர்தல் வன்முறைகள்[8]

- சட்டங்கள் பெண் அரசியல்வாதிகளுக்குப் பாதுகாப்பளிப்பவையாகவும், ஊடகங்களில் என்றாலுஞ்சரி சக அரசியல்வாதிகளினால் என்றாலுஞ்சரி, வெறுப்பூட்டும் பேச்சு மற்றும் பண்புக் குலைவு (character assassination)

---

[7] ibid

[8] Final Report on Election Related Violence And Malpractices Parliamentary General Election – 2010, CMEV https://cmev.org/wp-content/uploads/2010/12/final-report-on-election-violence-and-malpracticesenglish-ge-2010.pdf

ஆகியனவுட்பட, பெண் வேட்பாளர்களுக்கு எதிரான சகல வடிவங்களிலுமான உட்கிடையானவையும் வெளிப்படையானவையுமான தேர்தல் வன்முறைகளை இல்லாதொழிப்பவையாகவும் இருக்க வேண்டும்.

- தேர்தல் வன்முறைகள் தொடர்பில் பொது உடன்பாடு காணப்பட்ட தேர்தல் நடத்தைக் கோவையொன்றை அரசியல் கட்சிகளுக்கும் அவற்றின் வேட்பாளர்களுக்கும் அறிமுகப்படுத்த வேண்டும்.
- கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் தகவலுக்கான அணுகலையும் பாதுகாக்கின்ற அதேவேளை, அரச மற்றும் தனியார் ஊடகங்களில் வெறுப்பூட்டும் பேச்சு, தவறான தகவல்கள் மற்றும் பிழையான தகவல்கள் என்பவற்றைக் குறைப்பதற்காக, தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் மற்றும் பரந்தளவிலான சிவில் சமூகம் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து பொருத்தமான சட்டவாக்கங்கள் வகுக்கப்பட வேண்டும்.